මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/65** **2024.09.04**

**சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21**

**அரச மற்றும் தனியார் பிரிவுகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு தேர்தல்களின் போது சம்பளம் அல்லது சொந்த விடுமுறைகள் என்பனவற்றை இழக்காத வகையில் தமது வாக்கினை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்.**

தமது வாக்கினை அளிப்பதற்காக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவதற்காக தொழில் தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழும், (2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவின் திருத்தஞ் செய்யப்பட்ட) பிரிவின் கீழும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 2024.09.21 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் போதும், இதனை ஒழுங்காக செயற்படுத்த வேண்டியுள்ளது.

02. அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கான விசேட விடுமுறை தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக ஆகக் குறைந்தது தொடர்ச்சியான 4 மணித்தியாலங்கள் தேவைப்படுமெனவும், சம்பளம் குறைக்கப்படாத விசேட விடுமுறை வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. எனினும், தனியார் துறை ஊழியர்களுக்கு எழுத்து மூலமான கட்டளை விடுக்கப்பட்ட அவ்வாறான விசேட விடுமுறை வழங்கும் முறையொன்று இல்லாதிருப்பதனால், அநேகமான தொழில் தருநர்கள் தமது ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்காதிருக்கின்றார்களென கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் என்பன தேர்தல் ஆணைக்குழுவுடன் இதற்கு முன்னர் நடாத்திய கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக்கொண்ட இணக்கத்தின் பேரில் தனியார் துறை ஊழியர்களுக்கு தேர்தலின் போது வாக்களிப்பதற்காக செல்வதற்கும், வருவதற்கும் விடுமுறை வழங்குவதற்காக தூரம் மற்றும் காலத்துக்கு இடையிலான தொடர்பை தயாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்ட அட்டவணையின்படி, தனியார் துறை ஊழியர்களுக்கு தமது வாக்களிப்பிற்கான விடுமுறையை வழங்குவதற்கு தொழில் தருநர்கள் பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது.

| வாக்களிப்பிற்காக தமது சேவை நிலையத்திலிருந்து வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தூரம் | வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த விடுமுறைக் கால எல்லை |
|---|---|
| 40 கிலோ மீட்டர் அல்லது அதற்கும் குறைந்த | அரை நாள் (½) |
| 40 கிலோ மீட்டருக்கும் 100 கிலோ மீட்டருக்கும் இடைப்பட்ட | ஒரு நாள் (1) |
| 100 கிலோ மீட்டருக்கும் 150 கிலோ மீட்டருக்கும் இடைப்பட்ட | 1½ நாள் |
| 150 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட | 2 நாட்கள் |

04. மேலே உள்ள அட்டவணையின் மூலம் விடுமுறை வழங்கக்கூடிய ஆகக்குறைந்த கால எல்லை குறிப்பிடப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஒரு சில வாக்காளர்களுக்கு தமது வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கும், வருவதற்கும் சுமார் மூன்று நாட்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறு சந்தர்ப்பத்திற்கேற்ப மூன்று நாட்கள் விடுமுறை வழங்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

05. இதன் போது, ஊழியர்கள், விடுமுறைக்காக எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்க வேண்டுமென்பதுடன், அனைத்து தொழில் தருநர்களும் விசேட விடுமுறைக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் விடுமுறை வழங்கப்படும் காலம் என்பவற்றைக் காட்டும் அட்டவணையொன்றைத் தயாரித்து அதனை சேவை நிலையத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் சிபாரிசுகளுக்கு இணங்கியொழுகி தமது நிறுவனத்தின் ஊழியர்கள் வாக்களிப்பதற்காக சென்று வருவதற்குப் போதியளவு விடுமுறையை வழங்குமாறு அனைத்து தொழில் தருநர்களிடமும் தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்